பக்கங்கள் 21

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 08 வியாழக்கிழமை 26.10.2023 அதிர்வு 87

## இரண்டாம் தவணை நாளையுடன் முடிவு

அரசாங்க மற்றும் அரச அங்கீகார மளிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் 2023 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் தவணைக் காலத்தை நிறைவு செய்வது தொடர்பான அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

04

# கீரிமலை ஜனாதிபதி மாளிகை கையளிப்பு; சர்ச்சையை ஆராய்வதற்கு விசேட கூட்டம்

## சுமந்திரனின் ஆட்சேபனையை அடுத்து யாழ் ஒருங்கிணைப்புக் குழுவில் முடிவு



-எஸ்.நிதர்ஷன்-

**யாழ்ப்பாணம், கீரிமலை நகுலேஸ்வரத்தில் பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்து, சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட ஜனாதிபதி மாளிகைக் கட்டடத்தை உரிய நடைமுறைகள், அனுமதிகள் பெறப்படாது எவ்வாறு தனியாருக்கு வழங்க முடியும் என கேள்வி எழுப்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு முழுக்க முழுக்க தவறு என்றார்.**

04



## ஜெனரல் பலகல்ல இன்று காலமானார்



இலங்கையின் 16 ஆவது இராணுவத் தளபதியான லெப்டினண்ட் ஜெனரல் (ஓய்வு) லயனல் பலகல்ல இன்று வியாழக்கிழமை

04

# சம்பந்தன் வளர்த்த கடா மார்பில் பாய்ந்து விட்டது

## சுமந்திரன் குறித்து தவராசா கடுஞ் சீற்றம்



சம்பந்தன் வளர்த்த கடா அவர் மார்பில் பாய்ந்து விட்டது என அவருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் தமிழரசுக்கட்சி கொழும்புக்கிளைத் தலைவரும், கட்சியின் அரசியல் குழு உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரந் குறித்தே அவர் இப்படிக் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தின் முழு விவரம் அப்படியே வருமாறு:-

04

## முந்தல் களப்பில் இறந்து கரையொதுங்கும் மீன்கள்

முந்தல் களப்பு பகுதிக்குட்பட்ட பல பகுதிகளில் இறந்த நிலையில் பல இன வகை மீன்கள் கரையொதுங்கியுள் ளன.

05

## மூன்று நாள்கள் மட்டும்தான் சீனக் கப்பலுக்கு அனுமதி!

### வெளிவிவகார அமைச்சு கூறுகின்றது

சீனக் கடல் ஆய்வுக் கப்பலான “ஷி யான் 6”க்கப்பலுக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் கொழும்பு துறைமுகத்துக்கு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

05

## இளம் குடும்பஸ்தர் அடித்துக் கொலை

### வட்டக்கச்சியில் சம்பவம்

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டக்கச்சி – 5 வீட்டுத்திட்டம் பகுதியில் நேற்று இரவு 10.00 மணியளவில் 23 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்மடுநகர் – சம்புக்குளம் பகுதியைச் சேர்ந்த

05



# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இன்று கூடி விடயங்களை ஆராய்வு!

(எஸ்.நிதர்ஷன்)


யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக் கிழமை மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம். சாள்ர்ஸ் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது கல்வி, சுகாதாரம், கால்நடை, விவசாயம், கமநல சேவைகள், போக்குவரத்து, காணி, நீர்வழங்கல், உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

அதேபோன்று பொலிஸ் அதிகாரிகள், அரச திணைக்களத் தலைவர்களும் மற்றும் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.












# கடலின் அடியில் ஆய்வு செய்ய சீனக் கப்பலுக்கு அனுமதி மறுப்பு

இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதித் திக்கப்பட்டுள்ள போதிலும், கடலின் அடிப் பகுதியில் ஆய்வுகளை மேற் கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்று விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார்.

சீனக் கப்பலான 'ஷி யாங் 6' உடன் சேர்ந்து, தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் இந்து சமுத்திர கடற்பரப்பில் ஆய்வுகளை மேற் கொள்வதற்கு நேற்று (25) கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நாராவின் முதன்மை விஞ்ஞானியான கே. அருளானந்தன்,

கடலின் வெப்பநிலை மாற்றம் காலநிலையை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்து நீர் தூண்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இந்த ஆய்வின் வாயிலாக எதிர்கால வறட்சி மற்றும் மழைக் காலங்களை குறைந்தபட்சம் ஒரு மாதத்துக்கு முன்பே கணிக்க முடியும் .

காலநிலை மாற்றங்களை முன் கூட்டியே அறிந்து கொள்வது விவசாயத் துக்குப் பெரிய உதவியாகவிருக்கும் .

உலகிலேயே மிகக் குறைந்த ஆய் வுகள் மேற்கொள்ளப்படும் கடல் பரப்பாக இந்தியப் பெருங்கடல் திகழ்கிறது. இப்போது சீனாவுடன் இணைந்து நாங் கள் கூட்டு ஆராய்ச்சி நிகழ்த்த இருக் கிறோம். அதாவது எமது விஞ்ஞானிக ளும் கப்பலில் இருப்பார்கள். அதனால் இங்கிருந்து தரவுகளை சேகரித்து செல்ல யாரையும் நாங்கள் அனுமதிக்க மாட் டோம். தரவு கண்டுபிடிப்புகளை நாங் களே வைத்திருப்போம் எனவும் அவர் கூறினார்.

இருப்பினும், கடலுக்கு அடியில் எந்த ஒரு ஆராய்ச்சி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாட்டோம் என்றும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கடலுக்கடியிலுள்ள, கனிமங்கள் மற்றும் எரிவாயு வைப்புகளைக் கண்டறியக் கூடிய தரவுகளை சேகரிக்க அனுமதி இல்லை என்றும் இது நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது எனவும் கே. அருளானந்தன் தெரிவித்தார்.

இந்நிலையில், 28 ஆம் திகதிவரை மாத்திரமே கொழும்பு துறைமுகத்தில் கப்பல் நிறுத்தப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் எந்தவொரு ஆய்வுக்கும் அனுமதி வழங்கப்பட வில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# சுற்றுலாப் பயணிக்கு விதிக்கப்பட்ட அபராதம்!

இலங்கைக்கு சுற்றுலா வந்த பயணி ஒருவருக்கு காலி நீதிமன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

டபிள்யூ. டௌரோ யுவான் எட்வேர்ட் என்ற சுற்றுலாப் பயணிக்கே நீதிவான் லக்மினி விதானகமகே 35 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

இலங்கையில் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி, மோட்டார் சைக்கிளின் வருமான அனுமதிப்பத்திரம் இன்றி, தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள் செலுத்தியமை தொடர்பில் அந்த சுற்றுலாப் பயணிக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணி காலி கோட்டை பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது காலி கோட்டை சுற்றுலா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் மேலதிக நடவடிக்கைகளுக்காகக் காலி பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை சுற்றுலா பயணிக்கு மோட்டார் சைக்கிளை வாடகைக்கு வழங்கிய பெண் ஜெயக்கொடி கங்கணம்கே தேவிகா யாசரா என்பவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சாரதி உரிமம் இல்லாத நபருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கிய குற்றத்துக்காக அவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# அடையாள அட்டைக்கு அறவிடப்படும் கட்டணத்தைத் திருத்த நடவடிக்கை

தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு அறவிடப்படும் கட்டணத்தை திருத்தியமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதிக்கான கட்டணம் ஆயிரம் ரூபாவாக இருக்க வேண்டும் என் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைகளின் உண்மைத் தன்மையை சரிபார்ப்பதற்கான கட்டணம் ஒன்லைன் முறையில் சமர்பித்தால் 25 ரூபாவாகவும், பௌதீக ஆவணங்கள் மூலமாகவோ அல்லது ஆணையர் நாயகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய மின்னணு முறை மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட்டால் 500 ரூபாவாகவும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை புகைப்படக் கலைஞராக பதிவு செய்வதற்கான கட்டணம் 15 ஆயிரம் ரூபாவாக இருக்க வேண்டும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன், 10 ஆயிரம் ரூபாவாக இந்த கட்டணம் காணப்பட்டது.

பதிவுச் சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான ஆண்டுக் கட்டணமான 2 ஆயிரம் ரூபாவை 3 ஆயிரம் ரூபாவாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சம்பந்தன் வளர்த்த...

நீங்கள் வளர்த்த கடா உங்கள் மீது பாய்ந்துவிட்டது.

ஆப்பிரஹாம் சுமந்திரனின் தன்னிச்சையான முடிவுகளால் தமிழ்த் தேசியம் தேய்ந்து, கட்சிக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக கடந்த காலத்தில் நான் உங்களுக்கு பல கடிதங்களை எழுதியிருந்தேன். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக நீங்கள் அவரின் மீது எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்காமையின் விளைவுகளைத்தான் இப்போது பகிரங்கமாக காணக் கிடைக்கின்றது.

தகைமையுள்ள பல்வேறு தமிழ் தேசிய ஆளுமைகள் இருக்கத் தக்கதாக நீங்கள் 2010ஆம் ஆண்டு ஆப்பிரஹாம் சுமந்திரனை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக்கி அரசியல் முகவரி கொடுத்தீர்கள். ஆனால் இப்போது அரசியல் ரீதியில் உங்களை ஓரங்கட்டிவிட்டு கட்சியின் மொத்தக் கட்டுப்பாட்டையும் தனது பிடிக்குள் கொண்டு வருவதற்கான அனைத்துவிதமான சூழ்ச்சிகளையும் அவர் முன்னெடுக்கின்றார்.

2015 தேர்தலுக்குப் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்காவிட்டால் தான் அரசியலை விட்டும் விலகப் போவதாகக் கூறிய சுமந்திரன் இப்போது உங்களைப் பதவி விலகச் சொல்வது வேடிக்கையானது.

இரா.சம்பந்தன் அவர்களே!

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் நீங்கள். தமிழ்த் தேசியத்தின் பால் நீங்கள் கொண்டிருந்த பற்றுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை உங்களுக்கு அளிக்கச் செய்தது. கடினமான கால கட்டங்களில் நீங்கள், நாம் திருப்தியுறும் வகையில் வழிநடாத்தினீர்கள். இப்போது உங்களின் ஆளுமைத் தளத்தைப் படுகொலை செய்யும் வகையில் (corrector Assassination) (sic) உங்களை அவமதித்து 'முதுமை காரணமாக செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்கும் இரா.சம்பந்தன். உடனடியாகப் பதவி விலக வேண்டும்' என்ற தனது தனிப்பட்ட கருத்தை தனியார் ஊடகமொன்றில் பகிரங்கமாகக் கூறி, 288 நாடாளுமன்ற நாள்களில் வெறும் 39 நாள்கள் மட்டுமே சமுகமளித்த உங்களுக்கு நான்கு மில்லியன் ரூபா தொலைபேசி, எரிபொருள் வாகனம் போன்றவற்றுக்காக வழங்கப்பட்டுள்ளதாகத் தகவலறியும் சட்டத்துக்கமைய பெறப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அளிக்கப்படும் சிறப்புரிமையைக் கூட கேள்விக்குட்படுத்திய சுமந்திரன-ின் நாகரிகமற்ற கூற்றுப் பற்றியும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட உங்களைப் பதவி விலகச் சொல்லி நிர்பந்திப்பதும், அல்லாதவிடத்து அதற்காக நடவடிக்கை எடுக்கப் போவதாகச் சொல்லியிருப்பதும் உள்நோக்கங்கொண்ட ஒரு செயற்பாடாகும். இது உங்களை அவமானப்படுத்தியது மட்டுமல்ல தமிழ்தேசிய அரசியலுக்கான உங்களின் உழைப்பைக் கொச்சைப்படுத்துவதுடன் அது தமிழ் அரசுக்கட்சியையையும் இழிந்துரைக்கும் செயற்பாடுமாகும். எனவே விரைவாக இதற்கு தகுந்த நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும் என்பதே தமிழ்தேசியவாதிகளின் எதிர்பார்ப்பாகும்.

நீங்கள் வளர்த்த கடா பகிரங்கமாக பொதுவெளியில் வைத்து உங்களின் மார்பில் பாய்ந்துவிட்டது. திண்ணை எப்போது காலியாகும் என்ற அவரது எதிர்பார்ப்பு பகிரங்கமாகவே வெளிப்பட்டுவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவே நீங்கள் செயற்பட்டீர்கள். அதை இல்லாமல் செய்வதற்காகவே கடந்த உள்ளாட்சித் தேர்தலுக்காக வேட்பு மனுக் கோரப்பட்ட போது த.தே.கூட்டமைப்பைச் சிதைத்து, தமிழரசுக் கட்சியை தனிமைப்படுத்தினார். தமிழ்த் தேசியக் கூட்டடைப்பை ஆப்ரஹாம் சுமந்திரன் திட்டமிட்டு சிதறடித்தமையின் நோக்கம் த.தே.கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் இருந்து உங்களை தூக்கியெறிவதேயாகும். இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து உங்களை விலக நிர்ப்பந்தித்து, அரசியலில் இருந்து உங்களை முற்றாக அகற்றுவதே அவரது இலக்காகும். அதைத்தான் பகிரங்கமாக அவர் வெளிப்படுத்தி இருக்கின்றார்.

உடல் ரீதியில் நீங்கள் பலவீனமுற்றாலும், மனரீதியில் மிகவும் வலிமையானவர். உங்களின் வலிமையைச் சிதைப்பதற்கே சுமந்திரன் பகிரங்கமாக இவ்வாறான செயற்பாட்டில் இறங்கியுள்ளார்.

உடனடியாகக் கட்சி காப்பாற்றப்பட்டு தமிழ்த்தேசியத்தின் கனவுகளைச் சுமந்த மக்களின் அபிமானமிக்க தமிழ்த் தேசியவாதி ஒருவரைக் கொண்டு தலைமைத்துவத்தைப் பலப்படுத்தி, கட்சியை நிலைப்படுத்தாவிட்டால் நிச்சயம் கட்சியின் இருள் சூழ்ந்த பக்கத்தை விரைவில் காண வேண்டி வரும். அது நமது இனத்துக்கு இழைக்கப்படும் வரலாற்றுத் துரோகமாகும். நமது அரசியல் பாதையில் போடப்படும் மாபெரும் தடைக்கல்லாக அமையும்.

ஆக இதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என்று தமிழ் தேசியவாதிகள் எதிர்பார்க்கின்றனர். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெனரல் பலகல்ல...

காலமானார்.

கொழும்பிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தனது 78 ஆவது வயதில் அவர் காலமானார்.

அவரது இறுதிச் சடங்குகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் தவணை...

இதன்படி, சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான இரண்டாம் பாடசாலை தவணை நாளை வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகிறது.

மூன்றாவது பாடசாலைத் தவணை நவம்பர் முதலாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கீரிமலை ஜனாதிபதி...

இவ்விடயம் சம்பந்தமாக ஆராய விசேட கூட்டமொன்றையும் கூட்டுவோம் என்று யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம். சாள்ஸ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன் போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது குறிப்பாக யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு கீரிமலையில் கட்டப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை உரியமுறையில் அனுமதிகள் நடைமுறைகள் பின்பற்றப்படாது கட்டப்பட்டுள்ளது என்று சுமந்திரன் சொன்னார்.

இந்தக் காணிகள் பொது மக்களுக்குச் சொந்தமாகவும் உள்ளன. அவ்வாறான நிலையில் பொதுமக்களுக்கு அறிவிக்காது, காணிகளை அடையாளம் காணாது, எவ்வாறு கையகப்படுத்த முடியும்? முறையாக காணிகள் அளவிடுகள் செய்யப்படவில்லை. அவ்வாறன நிலையில் எவ்வாறு தனியாருக்கு ஜனாதிபதி மாளிகை எனக் கூறப்படும் கட்டடத்தை வழங்கமுடியும் என்று கேள்வி எழுப்பினார் சுமந்திரன்.

இதேவேளை இந்த விடயம் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, புலம்பெயர் முதலீட்டாளர்கள் மத்தியிலும் தவறான புரிதல் ஏற்பட்டுவிடும். இவை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார் அவர்.

மேலும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வடக்கு மாகாணசபை அமர்வுகள் இடம் பெற்ற காலத்திலேயே இக்கட்டடம் வடக்கு மாகாண சபைக்குக் கையளிக்கப் பட வேண்டும் என்று ஏக மனதானத் தீர்மானம் எடுக்கப்பட்டு அவை உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுள்ளமையைச் சுட்டிக்காட்டினார். அதேநேரம் மாகாண சபைக்கு வழங்காவிட்டாலும் யாழ் பல்கலைக்கழகத்துக்கு இதனை வழங்கக் கேரியிருந்தோம். ஆனாலும் இவை எவையும் பின்பற்றப்படவில்லை என்றார்.

மேலும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிற்கு தெரிவிக்காது, அறிவிக்காது எவ்வாறு இதனை நடைமுறைப்படுத்த முடியும் என அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட எனைய உறுப்பினர்களாலும் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விடயம்தொடர்பில்ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வும் கருத்து வெளியிட்டார். இந்த விடயம் அரசல் புரசலாக இடம்பெற்றுள்ளமை போல் உள்ளதால், இதனை ஆராய்ந்து, ஜனாதிபதியுடன் கலந்துரையாடி, முடிவுகளை அறிவிப்போம், இது சம்பந்தமாக ஆராய விசேட கூட்டமொன்றையும் கூட்டுவோம் என்றார்.

இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திர குமார் பொன்னம்பலம், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

# மட்டக்களப்பு ஜெயந்திபுர பௌத்த மயானத்தில் கற்பாறைகளைக் கொட்டியவர் விளக்கமறியலில்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுர சிங்கள மயானத்துக்குள் சட்டவிரோதமாக கற்பாறைகள்களை கனரக வாகனத்தில் கொண்டு சென்று கொட்டிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் ஒருவரை எதிர்வரும் 30 ஆம் திகத. வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

ஜெயந்திபுரத்தைச் சேர்ந்த சிங்கள – பௌத்த மக்கள் உயிரிழந்தால் அவர்களை அடக்கம் செய்வதற்காக அந்த பகுதியிலுள்ள விகாரைக்கு எதிராக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அந்தப் பகுதி வீதி நிர்மாணப் பணிகளைச் செய்து வந்த ஒப்பந்தகாரர் வீதியை அகழ்ந்த மணல், கற்பாறைகளை கனகரக வாகனத்தில் கொண்டு சென்று சட்டவிரோதமாக மயானத்துக்குள் கொட்டியுள்ளனர்.

இதனையடுத்து இது தொடர்பாக ஜெயந்திபுர விகாரை விகாராதிபதி பொலிஸ் நிலையத்தில் கடந்த 3 தினங்களுக்கு முன்னர் முறைப்பாடு செய்திருந்தார். பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரட்ண தேரர் நேற்றைய தினம் சென்று மீண்டும் முறைப்பாடு செய்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் அந்த மயானப் பகுதிக்குச் சென்று, நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் ஆள்கள் செய்த கொடூரமான வேலை இது எனத் தெரிவித்து, தென்பகுதியில் உள்ள தமிழர்களின் தலையை வெட்டப் போகிறார் எனவும், அவர்கள் புலிகள் எனவும் தெரிவித்து வீதியில் சத்தமிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து சட்டவிரோதமாக மயானத்தில் கற்பாறைகள், மணல்களை கொட்டிய வீதி அபிவிருத்தி ஒப்பந்தகாரரை இன்று வியாழக்கிழமை கைது செய்த பொலிஸார் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# விபத்தில் பூசகர் சாவு

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதி பூநகர், 20 ஏக்கர் பகுதியில் இன்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பூசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஈச்சிலம்பற்றில் இருந்து சேறுநுவர நோக்கி இவர் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இவ் விபத்தில் உயிரிழந்தவர் மட்டக்களப்பு பூநகர் சிவன்கோயிலில் பூசகராகப் பணி புரியும் – ஈச்சிலம்பற்று, பூநகர் பகுதியில் வசித்த – கே.கஜரூபன் (34வயது) எனத் தெரியவருகிறது.

உயிரிழந்த பூசகரின் சடலம் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பிலான விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இளம் குடும்பஸ்தர்...

23 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

வெற்றிலை வாங்குவதற்காக கடைக்குச் சென்ற அவருக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது.

அந்த அழைப்பின் பின்னர் அவர் கடையை விட்டு மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கடந்து சென்றுள்ளார்.

சற்று நேரத்தில் சத்தம் கேட்டது. அதன் பின்னர் இருவர் சம்பவ இடத்தை விட்டு ஓடினர்.

இரவு என்பதால் அடையாளம் காண முடியவில்லை எனப் பொலிஸாரின் விசாரணையின் போது சம்பவத்தை அவதானித்தவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இராமநாதபுரம் பொலிசார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அவர் கட்டையால் தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

மரணம் தொடர்பில் சம்பவ இடத்திற்கு சென்று நீதவான் விசாரணைகள் முன்னெடுத்த பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் எனவும், விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் அது கையளிக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் குற்றத்தடுப்பு பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.

## மூன்று நாள்கள்...

இந்தக் கப்பலுக்கு எதிர்வரும் 28ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவுக்குச் சொந்தமான “ஷி யான் 6” என்ற ஆய்வுக் கப்பல் நேற்றுப் பிற்பகல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இதன்படி, எரிபொருள் மற்றும் ஏனைய பொருள்களை பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(மற்றொரு செய்தி மூன்றாம் பக்கத்தில்)



## முந்தல் களப்பில்...

இன்று வியாழக்கிழமை காலை முதல் உடப்பு, பூனப்பிட்டி பகுதி இறால் பண்ணைகளின் அருகாமையில் இவற்றைக் காணக்கூடியதாக இருந்தது.

இதில் கெடுத்தல்மீன், கொடுவாய் மீன், ஜப்பான் மீன் உட்பட இன்னும் பலவகையான மீன்களைக் காணக்கூடியதாக இருந்தது.

மீனவர்கள் சிறுகடலில் மீன்களைப் பிடித்து விற்பனை செய்யலாமா அல்லது மீன்களை உணவுக்காக சமைக்கலாமா எனத் தெரியாது அஞ்சுகின்றனர்.





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னி மக்களுக்கு உதவிகள்

## 4 லட்சத்து 35 ஆயிரம் ரூபா இதற்கு ஒதுக்கீடு

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னிப் பகுதி மக்களுக்கு 4 லட்சத்து 35 ஆயிரத்து 720 ரூபா ஒமுக்கப்பட்டு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவிகள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா – மன்னார் வீதி, நெளுக்குளம் பிரதேசத்தில் வசிக்கும் வவுனியா மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவனுக்கு மருத்துவ தேவைக்காக ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

வவுனியா, நெடுங்கேணி பிரதேச மாணவர்களின் போக்குவரத்துக்காக நிதி வழங்கப்பட்டது.

பாடசாலை வரவொழுங்கற்ற பிள்ளைகளின் வரவொழுங்கை மேம்படுத்தும் நோக்கில் பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பான வவனியா வடக்கு பிரதேச செயலகத்தின் செயற்றிட்டத்துக்கு அமைவாக, நெடுங்கேணி மகா வித்தியாலயம், ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயிலும் 83 மாணவர்களின் போக்குவரத்து நலன் கருதி வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தால் பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கார்த்திகை, ஐப்பசி மாதங்களுக்கான நிதிச் செலவை சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கியது.

அதற்கு அமைவாக 2 ஆம் கட்ட கார்த்திகை மாத நிதியாக 91 ஆயிரத்து 220 ரூபா பிரதேச செயலகத்திடம் வழங்கப்பட்டது.

ஐப்பசி மாத நிதி முன்னர் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு – நெடுங்கேணி தண்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்காக முதலாம் கட்ட நிதியாக ஒரு லட்சம் ரூபா பாடசாலை முதல்வரிடம் வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு, வேணாவில் பிரதேசத்தில் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கு மருத்துவ தேவைக்காக 20 ஆயிரம் ரூபா நிதியும் 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி – மலையாளபுரம், செஞ்சோலை மாதிரி கிராமத்தில் வசிக்கும் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு விவசாயத் தேவைக்காக 45 ஆயிரம் ரூபா பெறுமதியில் மருந்து தெளிக்கும் பம், 100 அடி பைப் என்பன வழங்கப்பட்டன. கிளிநொச்சி – மலையாளபுரம், செஞ் சோலை மாதிரி கிராமத்தில்வசிக்கும்பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு மலசல கூடம் கட்டுமானப் பணிக்காக 75 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது

இந்தஉதவித் திட்டத்தை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வழங்கினார்.

சின்மயா மிசன் – சிவேந்திர சைதன்யா சுவாமிகள், சமூக செயற்பாட்டாளர் இ.தயாபரன் மற்றும் ஆச்சிரம தொண்டர்களும் கலந்து கொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மொட்டின் மகா நடிப்பு

'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவது' என்பார்கள். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (மொட்டு) கட்சியின் தலைவர்கள் நாட்டின் பொருளாதார நிலைமைகள் தொடர்பிலும், பிற விடயங்களை ஒட்டியும் வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் அப்படித்தான் இருக்கின்றன. அவர்களின் இரட்டை வேடப் போக்கைப் பொதுமக்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று எண்ணி வேடிக்கைப் பேச்சு பேசுகின்றார்கள் போலும். நாட்டின் வரிகள், கட்டணங்கள், பொருள்களின் விலைகள் அளவுக்கு அதிகமாக எகிறி இருக்கின்றமை தொடர்பில் தமது மொட்டுக் கட்சிக்குப் பொறுப்பில்லை, அது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளின் விளைவு என்ற மாதிரி அக்கட்சியின் பிரமுகர் நாமல் ராஜபக்ஷ பேசுகிறார். சர்வதேச நாணய நிதிய விடயங்கள் போன்றவை தொடர்பில் கொள்கைத் திட்ட முடிவுகளை எடுக்க முன்னர் ஆளும் கூட்டணிப் பங்காளர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தங்களுடன் ஆலோசனை கலக்க வேண்டும், ஆனால் அப்படிச் செய்யவில்லை என்று ஜனாதிபதி ரணிலைக் குறை கூறுவதன் மூலம் அல்லது அவர் மீது குற்றம் சுமத்துவதன் வாயிலாக, விலைவாசி உயர்வு, வரி அதிகரிப்புப் போன்ற அந்த சுமைகள் மக்கள் மீது சுமத்தப்படுவதற்கு தாங்கள் பொறுப்பல்ல, ஜனாதிபதி ரணிலே பொறுப்பு என்ற மாதிரிக் காட்டி, தமது மொட்டுக் கட்சிக்குப் பாவ விமோசனம் பெறப் பார்க்கின்றார் நாமல் ராஜபக்ஷ.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று - நாடாளுமன்றத்தில் ஆக ஒரே ஒரு உறுப்பினரை வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவினால் மக்கள் மீது சுமையச் சுமத்தும் பொருளாதாரத் திட்டங்களை தன்பாட்டில் எடுத்துச் செல்ல முடியாது, நாமல் ராஜபக்ஷவும் அவரது மொட்டுக் கட்சியினரும் கொடுக்கும் முண்டில்தான் அவரது ஆட்சியே ஓடுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டம் தொடர்பான பிரேரணையை நாடாளுமன்றத்தில் 120 எம்.பிக்களின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு நிறைவேற்றி, அதன் அடிப்படையில்தான் பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றது. தனது கட்சி சார்பில் ஒரே ஒரு எம்.பியை மட்டும் வைத்திருக்கும் ஜனாதிபதி ரணில் தமது பொருளாதாரத் திட்டங்களுக்கு நாடாளுமன்ற அனுமதியை பெறுவதற்கு நாமல் ராஜபக்ஷ உட்பட அவரது மொட்டுக்காட்சி கொடுக்கும் முழு ஆதரவே காரணம். அதை வழங்கிவிட்டு இப்போது வெளியே வந்து, ஒன்றும் தெரியாதவர் போல, அவரும் அவரது மொட்டுத் தரப்பினரும் விலைவாசி உயர்வு, வரி அதிகரிப்பு போன்றவை தொடர்பில் கூப்பாடு போடுவது இரட்டை வேடமாகும்.

அடுத்தது - ராஜபக்ஷக்கள் அழித்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவே சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தி, அதன் நிபந்தனைகளுக்கு அமைய இந்த விலைவாசி உயர்வு, வரி அதிகரிப்பு போன்றவற்றை ரணிலின் அரசு முன்னெடுக்க வேண்டி இருக்கிறது.

எப்படிப் பார்த்தாலும் இன்றைய மோசமான பொருளாதார நிலைமைக்கும் விளைவுகளுக்கும் சூத்திரதாரிகளாக - பொறுப்பாளர்களாக - இருந்துவிட்டு இப்போது தமக்கும் அவற்றுக்கும் தொடர்பில்லை என்பது போல மகா நடிப்பு விடுகிறது மொட்டுக் கட்சி.





## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஓய்வுநிலை விரிவுரையாளர் கௌரவம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால சிறப்புரை அரங்க நிகழ்வு அதிபர் ச.லலீசன் தலைமையில் நேற்று (25) நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதிப் பேச்சாளராக பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளின் முன்னாள் விரிவுரையாளர் இ.மருதலிங்கம் கலந்து சிறப்பித்தார்

அதிதி பேச்சாளருக்கான அறிமுக உரையை கலாசாலையின் உப அதிபர் சத்யா ரஞ்சித் ஆற்றினார்.

அதிதிப் பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.

## மாணவர்களுக்குப் போதை குளிசைகள் வழங்கியவர் அதிரடிப் படையால் கைது!

(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாகப் பாடசாலை மாணவர்களுக்குப் போதை குளிசைகளை விநியோகித்துவந்த சந்தேக நபர் தொடர்பில் கல்முனை விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து புதன்கிழமை (25) இரவு காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பாறை – காரைதீவு பிரதான வீதியில் வைத்து சந்தேக நபர் 500 போதை குளிசைகளுடன் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் அம்பாறை திசாபுர பகுதியை சேர்ந்த 28 வயது மதிக்கத்தக்கவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கு அமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.டி.டி. நெத்தசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்னாயக்க தலைமையிலான அதிகாரிகள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைது செய்யப்பட்ட நபர், சான்றுப் பொருள்களுடன் காரைதீவு பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தப்பட்டார். விசேட அதிரடிப் படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வாணிவிழா!

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வாணிவிழா திங்கட்கிழமை (23) அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் கலந்து கொண்டார்.நவராத்திரியை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு மற்றும் மாணவர்களின் பேச்சு, இசை, நடன நிகழ்வுகள் இடம்பெற்றன.













# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அமெரிக்க மருத்துவப் பிரதிநிதிகள்!

(கேதீஸ்)

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு பல்வேறு வழிகளில் உதவிக் கரம் நீட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பின் பிரதிநிதியான டாக்டர் முரளி ராமலிங்கம் மற்றும் அமைப்பின் குழு உறுப்பினர்கள் நேற்று (25) கள விஜயம் மெற்கொண்டனர்.

அவர்கள் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் தலைமையில் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

இதன்போது வைத்தியசாலையின் உதவி பெறப்பட்ட பிரிவுகள் காண்பிக்கப்பட்டு அப் பிரிவுகளின் முன்னேற்றம் பற்றிய விளக்கமும் அளிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் தாதிய பரிபாலகர், நிர்வாக உத்தியோகத்தர், மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் இதன்போது உடனிருந்தனர்.





# கௌரவிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

வளர்பிறை முஸ்லிம் பாரம்பரிய கலை கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் மாவடிப் பள்ளியைச் சேர்ந்த கலாபூஷணம் ஏ.எல்.அப்துல் சுபுஹான் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம்.சைபுதீன் தலைமையில் வெள்ளிக்கிழமை (20) மாவடிப் பள்ளியில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வே. ஜெகதீசன் பிரதம அதிதியாகவும் காரைதீவு பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்சான், முஸ்லிம் சமய கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.பர்ஹான் ஆகியோர் நிகழ்வில் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.





# வலிசுமந்த வரலாற்றுத் துயர்:

# பாலஸ்தீனரின் காசா இடப்பெயர்வு: தமிழரின் 1995 யாழ். இடப்பெயர்வு!





■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

எத்தனையோ ஆண்டு காலமாக தங்கள் சொந்த மண்ணில் வாழ்ந்த மக்கள் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணைவிட்டு இடம்பெயர்வார்கள் என எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

### தமிழரும் - பாலஸ்தீனரும்

உலக வரலாற்றில் தமிழரும், பாலஸ்தீனரும் சந்தித்த பாரிய இடப் பெயர்வுகள் துயர்படிந்த பக்கங்களாகும். சில நாள்களுக்கு முன்னர் காசாவில் உள்ள அனைத்து பாலஸ்தீனியர்களும் இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் வடக்குக் காசாவை விட்டு வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் உத்தரவிட்டது. இந்த அறிவிப்பால் சுமார் 1.1 மில்லியன் மக்கள் கட்டாய இடப்பெயர்வை நோக்கித் தள்ளப்பட்டனர்.

இத்தகைய துயர்மிக்க பாரிய இடப்பெயர்வை யாழ்ப்பாண மக்கள் சந்தித்தார்கள். 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி இந்த மாபெரும் அவலமிகு இடப்பெயர்வு நடந்தது.

தற்போது காசாவில் ஐந்து பகுதிகளில் சுமார் 2.3 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். வடக்கு காசா, காசா நகரம், டெய்ர் எல்-பாலா, கான் யூனிஸ் மற்றும் ரஃபா போன்ற இடங்களிலேயே இந்த நிலம் சுமார் 365 சதுர கிலோ மீற்றர் (141 சதுர மைல்கள்) கொண்டதாகும்.

41 கிலோ மீற்றர் (25 மைல்) நீளத்தில், தெற்கில் உள்ள ரஃபாவிலிருந்து வடக்கே மேற்குக் கரைவரை உள்ளது.

ஆயினும் இஸ்ரேலின் வெளியேற்றும் எச்சரிக்கைக்கு அடி பணிய வேண்டாம் என ஹமாஸ் அந்தப் பகுதி மக்களை வலியுறுத்தியுள்ளது. உங்கள் வீடுகளில் உறுதியாக இருங்கள் என்று ஹமாஸ் பாலஸ்தீனிய மக்களுக்கு அறிவித்துள்ளது.

### காசா மக்களின் இரண்டாவது இடப்பெயர்வும் பேரழிவும்

தற்போது நடப்பவை 1948 போரை நினைவூட்டுவதாக காசா மக்கள் வேதனை அடைந்துள்ளனர். 1948 ஆம் ஆண்டு பாலஸ்தீனத்தில் இருந்து இஸ்ரேல் தனி நாடாக உருவானது. அதன் நீட்சியாக இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்கும் இடையே போர் வெடித்தது.

கிட்டத்தட்ட ஓர் ஆண்டு நீடித்த இந்த போரின் போது 500 பாலஸ்தீன கிராமங்கள், நகரங்களை இஸ்ரேல் அழித்தது. 1948 பாலஸ்தீன பகுதிகளிருந்து ஏறத்தாழ 7 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் கட்டாய இடப்பெயர்வுக்கு தள்ளப்பட்டனர். அதன் பின்னர் அவர்களால் தங்களின் பகுதிக்கு திரும்பவே முடியவில்லை.

அப்படி இடம் பெயர்ந்தவர்களின் வாரிசுகள்தான் தற்போது காசாவில் போர் சூழலை எதிர்கொண்டு வருகின்றனர். 1948 போரின் போது கட்டாய இடப்பெயர்வுக்கு தள்ளப்பட்ட நிகழ்வை பாலஸ்தீனர்கள் 'நக்பா' (பேரழிவு) என அழைக்கிறார்கள்.

### தமிழரின் துயர வலிசுமந்த வரலாறு

மிகச்சரியாக இன்றைக்கு 28 வருடங்களின் முன் யாழ்ப்பாண இடப்பெயர்வானது 1995 ஒக்ரோபர் 30இல் நீதி மறுக்கப்பட்ட மக்களாக தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல் அன்று அறுக்கப்பட்டது. அன்றைய கொடூர

(11ஆம் பக்கம் பார்க்க)

# பாலஸ்தீனரின் காசா இடப்பெயர்வு...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)



நாள்கள் மிகப்பெரும் மனித அவலத்தைச் சுமந்தது.

இன்னமும் வரலாற்றில் வலிசுமந்த வரலாறாகவே என்றும் நிலைத்து நிற்கின்றது. யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை ஐந்து லட்சம் ஆகும். குடா நாட்டை வடபகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த இரண்டு வீதிகளின் ஊடாக ஐந்து லட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து சென்ற கொடிய நாள்களை யாரும் மறக்க மாட்டார்கள்.

இந்தத் துயரத்தை எக்காலத்தாலும் அழிக்க முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்கள் இன்னமும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றது.

யாழ். இடம்பெயர்வின் போது, இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா அப்பா என்று வீட்டில் விட்டு வந்தவர்கள், நிறைமாத கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என்று வீதியில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணி நேரம் எடுத்த கோரமான நாள்களாகும்.

சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட அந்தக் கொடூரம் மிக்க நாள்களை யாரும் மறக்க மாட்டார்கள். தண்ணீர் கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்திப் பருக்கியவர்கள், வீதி வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்துக் குடித்தவர்கள், வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு நிலத்தில் குழி தோண்டிப் புதைத்தவர்கள் என்று கொடுமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். அவ்வாறு கொடுமைமிக்க காலமாகும்.

### பாலஸ்தீனர்களின் இரண்டாவது ‘நக்பா’

இந்த நிலையில் இஸ்ரேல் ராணுவத்தின் எச்சரிக்கையைத் தொடர்ந்து, வடக்குக் காசாவில் இருந்து வெளியேறிவரும் பாலஸ்தீனர்கள் தற்போது நடந்து கொண்டிருப்பதை ‘இரண்டாவது நக்பா’ என்கிறார்கள்.

இப்போது நடப்பவை எல்லாம் நக்பாவை நினைவுபடுத்துகிறது. 1948 ஆம் ஆண்டு போரில் ஏற்பட்ட பேரழிவால் ஏழரை லட்சத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் சொந்த மண்ணிலிருந்தே வெளியேற்றப்பட்டனர். அதேபோல் இப்போது காசாவிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

ஆக்கிரமிப்பாளர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இதுதான் எங்கள் நிலம். இங்கேதான் எங்களின் வேர்கள் இருக்கும். சுதந்திரம், அமைதி, பாதுகாப்புக்காக நாங்கள் தொடர்ந்து போராடுவேம் என்று பாலஸ்தீன மக்கள் உறுதிபூண்டுள்ளனர்.

1880-90களில் 15 ஆயிரம் எண்ணிக்கையில் இருந்த யூதர்கள் அடுத்த 30 ஆண்டுகளில் ஒட்டுமொத்த பாலஸ்தீன மக்கள் தொகையில் 6 சதவிகிதமாக மாறியுள்ளனர். இன்று பாலஸ்தீனத்தில் 79 சதவிகிதம் இஸ்ரேலியர்கள் வாழ்கின்றனர். 1948 இற்குப் பிறகு 600 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலிய நகராட்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புகளால் துண்டு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டது பாலஸ்தீனம். இன்று, இரு பகுதிகளாக பாலஸ்தீனத்தின் காசாவும் மேற்கு கரையும் தொடர்பற்று இருக்கின்றன.

### திறந்தவெளி சிறை வாழ்க்கை

பாலஸ்தீனத்தில் 2006 இற்குப் பிறகு, பாரிய சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டு ராணுவக் காவலுடன் இந்த இரண்டு மக்கள் பகுதிகளும் சிறை வைக்கப்பட்டிருக்கிறது. காசாவில், சுமார் 23 லட்சம் மக்கள் மிகக் குறுகிய நிலப் பகுதியில், திறந்த வெளி சிறையில் அடைக்கப்பட்டு இருக்கின்றனர்.

இஸ்ரேலின் போர்கள் அனைத்தும் அடர்த்தியாக அடைக்கப்பட்டு இருக்கும் இந்த மக்களின் மீதே நடத்தப்படுகின்றன.

மேலும், பாலஸ்தீனத்தின் தரை, வான் மற்றும் கடல்வழி எல்லைகள் அனைத்தும் இஸ்ரேலின் ராணுவத்தால் பாதுகாக்கப்பட்ட ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது.

இதனால், காசாவுக்கான உணவு, குடி தண்ணீர், மின்சாரம், மருத்துவ உதவிகள் ஆகிய அனைத்தும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன.

இதனால், போர் அற்ற காலங்களிலும் கூட பாலஸ்தீனத்தின் 63 வீதத்துக்கும் அதிகமான மக்கள் உணவுப் பாதுகாப்பில்லாத நிலையிலேயே வாழ்கின்றனர். காசாவின் குடி தண்ணீரில் தற்போது 90 வீதத்துக்கும் மேல் பயன்படுத்த முடியாத நிலையில் மாற்றப்பட்டுள்ளது.

போரின்போது அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் முற்றும் முழுவதுமாக தடுத்து நிறுத்தப்படும்.

ஒவ்வொரு போரின் போதும் சர்வதேச சட்ட விதிகளை மீறி இத்தகைய மனித உரிமை மீறலை செய்கிறது இஸ்ரேல். கொள்கை அடிப்படையில் திட்டமிட்டு இவை நடத்தப்படுகிறது. இருப்பினும், உலக நாடுகள் கண்டும் காணாதவாறு கடந்து செல்கின்றன.

### பாலஸ்தீன இனச் சுத்திகரிப்பு நாள் மே 15

ஒவ்வொரு ஆண்டும் மே 15 அன்று உலகெங்கிலும் உள்ள பாலஸ்தீனியர்கள் நக்பா (பேரழிவு) தினத்தை நினைவு கூருகின்றனர். இது 1948 இல் பாலஸ்தீனத்தின் இனச் சுத்திகரிப்பு இடம்பெற்ற தினமாகும்.

பாலஸ்தீனத்தில் ஒரு யூத அரசை உருவாக்குவதற்கு பிரிட்டிஷ் அரசின் ஆதரவைப் பெற்று, படைகள் இஸ்ரேல் அரசை நிறுவுவதாக அறிவித்தன.

இதுவே முதல் அரபு-இஸ்ரேல் போரைத் தூண்டியது. சியோனிச இராணுவப் படைகள் குறைந்தது 750,000 பாலஸ்தீனியர்களை அவர்களது வீடுகள் மற்றும் நிலங்களில் இருந்து வெளியேற்றியது. அன்று முதல் பாலஸ்தீனத்தின் 78 வீதத்தைக் கைப்பற்றின. மீதமுள்ள 22 வீதம், இப்போது ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் முற்றுகையிடப்பட்ட காசா பகுதி எனப் பிரிக்கப்பட்டது.

பாலஸ்தீனியர்களைப் பொறுத்தவரை, நக்பா ஒரு வரலாற்று நிகழ்வு அல்ல. அது எப்போதும் நிற்காத வலிமிக்க இடப்பெயர்வின் தொடர்ச்சியான செயல்முறையாகும்.



இன்றும் அண்டை நாடுகளில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பாலஸ்தீனரின் காசா இடப்பெயர்வு...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள குறைந்தது 58 முகாம்களில் சுமார் ஆறு மில்லியன் பதிவு செய்யப்பட்ட பாலஸ்தீனிய அகதிகள் வாழ்கின்றனர்.



### 24 மணிநேர இடப்பெயர்வு உத்தரவு

காசாவின் வடபகுதியில் வசிக்கும் 1.1 மில்லியன் பாலஸ்தீனியர்களும் அடுத்த 24 மணிநேரத்தில் தென்காசாவுக்கு இடம்பெயரவேண்டும் என்ற இஸ்ரேல் அறிவிப்பானது, பாரிய மனிதாபிமான விளைவுகள் இன்றி இந்த இடப்பெயர்வு இடம்பெற முடியாது என குறிப்பிட்டுள்ள ஐ.நா. தெரிவித்துள்ளது. காசாவின் வட பகுதியில் வசிக்கும் மக்கள் 24 மணிநேரத்துக்குள் தென் பகுதிக்கு இடம்பெயர வேண்டும் என்னும் இஸ்ரேலின் கடும் உத்தரவு உலக நாடுகளால் கண்டிக்கப்பட்டது.

வலிகள் சுமந்த இடப்பெயர்வு

'சூரியக் கதிர்' ராணுவ நடவடிக்கைகள் போல் தமிழ் பேசும் மக்கள் மீது தொடுக்கப்பட்ட கொடுமையான ஆக்கிரமிப்புக்கள் இன்று நேற்று மட்டும் நடந்தவை அல்ல. இந்தச் சூரியக்கதிர் நடவடிக்கை 1995 ஒக்ரோபர் 17 இல் தொடங்கப்பட்டது. பலாலி, காங்கேசன்துறை போன்ற படைத்தளங்களில் இருந்து முழு யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றும் நோக்கில் படைத்தரப்பினர் போரைத் தொடங்கியிருந்தார்கள். எங்கும் வான்வழித் தாக்குதல்களும் ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கிச் சூடுகளும் சரமாரியாக நடத்தப்பட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடத்தி பாரிய இன அழிப்பு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ள இருப்பதாகக் கருதி பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பகுதிகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லாத அந்தக் காலத்தில் , அன்றைய கும்மிருட்டினில் அத்தனை மக்களும் தங்கள் சொந்த வாழ்வின் வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு, எங்கே போவது, என்ன செய்வது என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு செம்மணியால் நடந்தார்கள். விமானக் குண்டு வீச்சாலும் ஆயிரக் கணக்கில் மக்கள் மடியும் நிலையில் இருந்தும், வெட்ட வெளிகளில் பல மணி நேரங்களுக்கும் மேலாக நடக்க வேண்டியிருந்தனர்.

மூடை முடிச்சுகளைக் கட்டி மக்கள் எல்லோரும் வீதிகளில் இறங்க வீதிகளும் இறுகிப்போனது. தங்க இடமெதுவும் இன்றி ஆலயங்கள், தேவாலயங்கள், பேருந்து நிலையங்கள் என கண்ணில் பட்ட இடங்களில் மக்கள் தங்கள் நாள்களை கழித்தனர்.

### வலிசுமந்த வரலாற்றை யார் மறப்பர்...?

அன்றைய யாழ். மக்களின் இரவு மிகப் பெரும் மனித அவலத்தை சுமந்தது. இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், சொந்தங்களை தொலைத்து விட்டு வந்தவர்களாக, காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் அவதிக்குள்ளான வலி முடிவடையாமல், இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

உலக வரலாற்றில் யாழ். மக்களின் துயரமிகு இடப்பெயர்வைப் போல வேறு எந்த உலக நாட்டு மக்களும் சந்தித்திருக்க மாட்டார்கள்.

ஆர்மேனிய மக்களின் வரலாற்றில் நடந்த மிகப்பெரிய துயரமான 1915 இனப்படுகொலை சம்பவங்கள் போல் 1995 யாழ். இடப்பெயர்வு தமிழ் மக்களின் துயர வரலாற்றில் இடம்பெற்றது.

1995 சூரியக்கதிர் நடவடிக்கை எனும் அந்தக் கொடிய யுத்தத்தால், யாழ்ப்பாணம் தீவிர யுத்தக் காயங்களுக்கு உள்ளானது. இன்றுவரை ஆறாத காயங்களும் சிதைவுகளும் மக்கள் மனதில் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன.

காலங் காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவில் நிர்ப்பந்தங்களால் துரத்தப்பட்ட அந்த வலி, அதே வலி இன்னமும் தமிழ் மக்கள் மனதிலிருந்து நீங்கவில்லை.

எத்தனை ஆண்டு காலமாகப் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருந்தாலும் தமிழர்கள் இன்னும் விடுதலைக்காய் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.



# உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒன்லைனில் கட்டணங்கள் செலுத்துவதற்கு நடவடிக்கை

அடுத்த வருடம் முதல் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான கட்டணம் செலுத்தும் நடவடிக்கை ஒன்லைன் முறையில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல உள்ளூராட்சி மன்றங்கள் இது தொடர்பான வேலைத் திட்டத்தை ஏற்கனவே ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் வரி அறவீடு நடவடிக்கைகள் உள்ளிட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

அதன்படி எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் இயங்கும் 341 உள்ளூராட்சி நிறுவனங்களிலும் உரிய வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான அனைத்து வீதிகளையும் இவ்வருட இறுதிக்குள் வரைபடமாக்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

# மருதமுனை மகளிர் அரபுக் கல்லூரியின் 2 ஆவது பட்டமளிப்பு இரு நாள்களுக்கு

(அஸ்ஹர் ஆதம்)

மருதமுனை தாறுல் ஹுதா மகளிர் அரபுக் கல்லூரியின் 2 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் நிறைவேற்றுக் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி டாக்டர் ஏ.ஆர்.எம்.ஹாரிஸ் தலைமையில் இரு அமர்வுகளாக பட்டமளிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பட்டமளிப்பைக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி எம்.எல்.முபாறக் மதனி ஆரம்பித்து வைப்பார்.

முற்பகல் 10 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

28 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள முதலாம் நாள் அமர்வுக்கு மௌலவியா நூறுல் ஜன் இஸ்மாயில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

பட்டமளிப்பு விழா உரையை ஜமா அத் அன்சாரிஸ் சுன்னதுல் முஹம்மதிய்யாவின் தலைவர் அஷ்-ஷெய்க் என்.பீ.எம்.அபூபக்கர் சித்தீக் மதனி நிகழ்த்தவுள்ளார்.

கௌரவ அதிதிகளாக ஜமா அத் அன்சாரிஸ் சுன்னதுல் முஹம்மதிய்யாவின் செயலாளர் ஏ.எல்.கலீலுல் றஹ்மான், பேராதனைப் பல்கலைக் கழக பல் மருத்துவபீடத்தின் முன்னாள் தலைவரும் ஓய்வு நிலை பேராசிரியருமான டாக்டர் எம்.ஏ.எம்.சித்தீக், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பிரதி தலைவரும் அம்பாறை மாவட்ட உலமா சபையின் தலைவருமான ஐ.எல்.எம்.ஹாஷிம் சூரி ஆகியாரும் கலந்து கொள்வர்.

வட மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.எல். அப்துல் மனாப், பொத்துவில் மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் ஆகியோர் விஷேட அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ள இரண்டாம் நாள் அமர்வுக்கு ஓய்வுநிலை ஆசிரியை திருமதி முனவ்வறா இஸ்மாயில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இரண்டாம் அமர்வுக்கான பட்டமளிப்பு விழா உரையைத் தென் கிழக்குப் பல்கலைக் கழக அரபு, இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் முன்னாள் தலைவரும் துறைசார் பேராசிரியருமான கலாநிதி எம்.எஸ்.எம்.மஸாஹிர் நிகழ்த்தவுள்ளார்.

கௌரவ அதிதிகளாக பொறியியலாளரும் சீப்பலஸ் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளருமான எம்.எம்.எம்.சபீக், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஏ.எச்.எம். அன்சார் ஆகியோர் கலந்து கொள்வர்.

அக்கரைப்பற்று மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச். எம்.ஹம்ஸா, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட மேலதிக நீதிபதியும் தலைவருமான வீ.என். சியான், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி ஆகியோர் விஷேட அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

இங்கு பட்டமளிப்பு விழா மலரொன்றும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.



# தொழிற்பயிற்சி வழிகாட்டல்

(அஸ்ஹர் ஆதம்)



சௌபாக்கியா வேலைத் திட்டத்திலுள்ள பயனாளிகளுக்கான தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வொன்று சாய்ந்தமருதில் நேற்று இடம் பெற்றது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையில் சாய்ந்தமருது பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு பொலிவேரின் கிராம சௌபாக்கியா கட்டடத்தில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே. எல்.ஏ.ஹமீட் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் வளவாளராக கைத்தொழில் உத்தியோகத்தர் ஏ ஏ.ஜலீல் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் திட்டமிடல் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.பி.எம்.அஸ்ஹர், எம்.ஐ.எம்.பஷீர்.ஏ.எம்.எம்.றியாஸ், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ரீ.தெஸ்மியா, அபிவிருத்தி உத்தியோ கத்தர்களான இஸட். எம். றியாத் எச்.எம்.எம்.டில்ஷாட், எம்.எம். நாஸிர் அலி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்



# மருதமுனையில் மாணவருக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் உள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மருதூர் கொத்தன் மண்டபத்தில் நேற்று (25) நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை தொகுதி அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு காற்று உதாரணங்களை வழங்கினார்.

கல்வி அமைச்சுக்கு சீன அரசால் வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களில் ஒரு தொகுதி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கு அமைய 270 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை வலய கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.எம். றியால், ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் பி.எம்.எம்.ஜெஃபர், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளர் சட்டத்தரணி எம்.றனூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# அலுவலக நடைமுறை தொடர்பில் செயலமர்வு

(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான அலுவலக நடைமுறைகள் மற்றும் தாபன விதிக்கோவைகள் தொடர்பான செயலமர்வு பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (25) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கமைய இடம் பெற்ற செயலமர்வில் பதிவாளர் கிளை மூலமாக மேற்கொள்ளப்படும் கடமைகள் தாபன விதிக்கோவை தொடர்பாகவும் முஸ்லிம் விவாக சட்டம், பிறப்பு, இறப்பு பதிவுகள், திருமண பதிவுகள் உள்ளிட்ட தாபன விதிக்கோவை மூலமான நடை முறைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வுக்கு வளவாளராக மேலதிக மாவட்ட பதிவாளர் அஸ்வர் கலந்து கொண்டார்.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர உட்பட சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




# பெண்கள் வலுவூட்டல் கற்கை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு கடந்த மூன்று மாத காலமாக நடத்திய பெண்கள் வலுவூட்டல் சார்ந்த சான்றிதழ் கற்கைநெறி யின் சான்றிதழ் வழங்கும் விழா இன்று (26) வியாழக் கிழமை காரைதீவில் நடைபெற்றது.

வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் காரைதீவு லேடிலங்கா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசனும் கௌரவ விருந்தினராகக் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் டிஜே .அதிசயராஜும் கலந்து கொண்டனர்.

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ. அசீஸ் , உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, மாவட்ட இணைப்பாளர் இர்பான், உளவளத்துறை உத்தியோகத்தர் ரி.சுதர்சன், இணைப்பாளர் மொகமட் ஷா ஆயியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பயிற்சி நெறியை மேற்கொண்ட 40 மாணவிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.









# அதிபர் நியமனம்

(நிந்தவூர் செய்தியாளர்)

சுமார் 19 வருடங்களின் பின்னர் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட நிந்தவூர் அல்–அதான் வித்தியாலயத்துக்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிந்தவூர் அல்–அஷ்ரக் ஜுனியர் பாடசாலையில் 09 வருடங்களாக பணியாற்றிய எம்.ஹபீபுல்லாஹ் மேர்சா இன்று (26) கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீமால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்காக நியமனக் கடிதம் கல்முனை வலய கல்வி அலுவலகத்தில் வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீமால் வழங்கப்பட்டது.



# ஊடகத்துறைக்கான கொள்கைச் சட்டம் உருவாக்குவது பற்றிக் கலந்துரையாடல்

(பாறுக் ஷிஹான்)

ஊடகத்துறைக்கான கொள்கை சட்டமொன்றை உருவாக்குவது தொடர்பாக மட்டக்களப்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு இணங்க, வெகுசன ஊடக அமைச்சு, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்து இலங்கையில் தேசிய ஊடகக் கொள்கைக்கான கட்டமைப்பொன்றை உருவாக்கும் பணியிலும் இலங்கை ஊடகத்துறைக்கான கொள்கை சட்டமொன்றை அமைப்பதிலும் ஈடுபட்டுவருகின்றது.

அதற்கமைய, வெகுசன ஊடக அமைச்சால் கல்வியாளர்கள் மற்றும் ஊடகத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை உள்ளடக்கி வழிநடத்தல் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு பல சந்தர்ப்பங்களில் கூடி விசேட குழுக் கலந்துரையாடல்கள் மூலம் தேசிய ஊடகக் கொள்கையை உருவாக்கும் செயல் முறையில் அனைத்து பங்குதாரர்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினரிடம் இருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது.

அதற்கமைவாக வெகுசன ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த ஊடகவியலாளர்களுடனான விசேட கலந்துரையாடலொன்று இன்று (26) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் டீ.எல்.யூ.பீரீஸ் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் மொழி மற்றும் தொடர்பாடல் கற்கைகள் பிரிவின் தலைவர் கலாநிதி வி.ஜே.நவீன்ராஜ், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவபிரியா, வெகுஜன ஊடக அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) டபிள்யூ.பீ.செவ்வந்தி, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் தலைவருமாகிய மஹிந்த பத்திரன, மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவின் பொறுப்பதிகாரி வ.ஜீவானந்தன், வெகுசன ஊடக அமைச்சின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடகம் சார் விசேட நிபுணர் சதுரங்க அப்புவாராச்சி ஆகியோர் கலந்துகொண்டனர்.





# விழிப்புணர்வூட்டல் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர் )

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில், புதிதாய் இணைந்து கொண்ட முதலாம் வருட மாணவர்களுக்காகக் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் திசைமுகப்படுத்தும் தொடர் நிகழ்ச்சியில், ஒரு நிகழ்ச்சியாக "இளைஞர்கள் எதிர்நோக்கும் பாலியல் சவால்கள்" எனும் தலைப்பிலான விழிப்புணர்வூட்டல் இன்று கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விஷேட அதிதியாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பாலியல் நோய்கள் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம். என். எம். தில்ஷான் இளைஞர்கள் எதிர்நோக்கும் பாலியல் சவால்கள் தொடர்பில் விரிவுரையாற்றினார்.









# முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் 3 ஆவது மாநாடு காத்தான்குடியில்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான ஸ்ரீலங்கா பென் கிளப்பின் ஏற்பாட்டில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் மூன்றாவது தேசிய மாநாடு "குடும்பம் எங்கள் விழி ஆற்றல் எங்கள் வழி" எனும் தொனிப்பொருளில் காத்தான்குடி சீஐஜி மண்டபத்தில் (21) சனிக்கிழமை இடம் பெற்றது.

ஸ்ரீ லங்கா பென் கிளப்பின் ஸ்தாபகத் தலைவி சம்மாந்துறை மஷ்ஹூறா தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில், இலங்கையின் பல பாகங்களிலுமிருந்தும் அறுபதுக்கு மேற்பட்ட பெண் எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக ஒலுவில் தென் கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பேராதனை வளாக மெய்யியல்துறை ஓய்வு நிலைத் தலைவரும் பேராசிரியருமான எம்.எஸ்.எம். அனஸ் மற்றும் காத்தான்குடி நகரசபை செயலாளர் றிப்கா ஷபீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மூன்று அமர்வுகளாக இடம்பெற்ற இவ்விழாவில், முதல் அமர்வு பெண்களுக்காக மட்டும் இடம்பெற்றது.

இரண்டாம் அமர்வில் இருபத்திரெண்டு முஸ்லிம் பெண்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக் கவிதைகள் அடங்கிய "இமயம் தழுவும் இறக்கைகள்" கவிதைத் தொகுதி வெளியிட்டு வைக்கப்பட்டது.

மூன்றாவது அமர்வில் ஸ்ரீலங்கா பென் கிளப்பின் சிறந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், நெறியாளர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



# கல்முனை மாநகர 'பட்ஜெட்'டுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு!

(ஏ.எஸ்.மௌலானா,நூருல் ஹுதா உமர், ஏ.எஸ். மௌலானா)

கல்முனை மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு– செலவுத் திட்டத்துக்கு கல்முனையன்ஸ் போரம் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளது.

அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் முபாரிஸ் எம்.ஹனிபா தலைமையிலான குழுவினர் நேற்று புதன்கிழமை (25) பிற்பகல், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியிடம் இதனைக் கையளித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸியும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது முன்மொழிவுகளை மாநகர சபையின் 'பட்ஜெட்'டில் உள்வாங்கி நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றி ஆணையாளரிடம் வலியுறுத்தப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்குப் பொது மக்கள் மற்றும் பொது அமைப்புகளிடம் முன்மொழிவுகளை கோரியமைக்கு அமைய கல்முனையன்ஸ் போரம் செயற்பாட்டாளர்களால் ஆணையாளருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.




# அக்கரைப்பற்றுக்கு அம்புலன்ஸ்கள்

(எம். எப். நவாஸ்)

இலவச மரண மற்றும் அவசர சேவைகளுக்கான அம்புலன்ஸ் வாகன கையளிப்பு நிகழ்வு (25) அக்கரைப்பற்று தக்வா ஜும்மா பள்ளிவாசல் வளாகத்தில் தலைவர் எம்.எம்.எம். ரியாத் தலைமையில் நடைபெற்றது.

மேல்மாகாண மரண சேவைக்காகவும் அக்கரைப்பற்றை தளமாக கொண்ட சேவைக்குமென 15 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு வாகனங்கள் தக்வா ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கை யாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

ஜெயெம்.சியாப் (ஸலபி) நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று உலமா சபை தலைவர் ஆஜ.சித்தீக் ஆபிழ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஜனாஸா குழுவின் பொறுப்பாளரும் சமுர்த்தி முகாமையாளருமான என்ரீ.மசூரிடமும் தேசிய மரண உபகார இணைப்பாளரும் அகில இலங்கை வை.எம்.எம்.எ. பொலன்னறுவை மாவட்ட பணிப்பாளருமான அப்துல் காதரிடமும் வாகன திறப்புக்கள் கையளிக்கப்பட்டன.

# முன்பள்ளி மாணவருக்கு இலைக்கஞ்சி வழங்கல்

(எம்.எப்.நவாஸ்)

வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலக கிழக்கு சமுர்த்தி வங்கி வலயப் பிரிவில் போசணை மட்டத்தை உயர்த்தும் வகையில் முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு திங்கட்கிழமை (23) பிரதேச செயலாளர் அன்சார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமைபீட முகாமையாளர் மதுல்லாஹ், முகாமைத்துவ பணிப்பாளர் தஸ்லிம், கருத்திட்ட முகாமையாளர் மசூர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காதிரியா பாடசாலை அதிபர் ஜெஸீம், அபிவிருத்திக் குழு உறுப்பினர்களான அப்துர் ரஹ்மான், அப்துல் கூக்கூர் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று 14 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பியாஸின் ஒருங்கிணைப்பில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.



# புத்தூர் கிழக்கு மக்களுடன் வட்டார ரீதியில் கலந்துரையாடல்

புத்தூர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில், பிரதேசத்தின் தேவைப்பாடுகளையும் அவற்றுள் சபையால் முன்னெடுக்கக் கூடிய வேலைத் திட்டங்களையும் உள்ளடக்கிய வட்டார ரீதியான முதலாவது கலந்துரையாடல் நாளை (27) வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு குருநாதர் சன சமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வட்டாரம்- 07 புத்தூர் கிழக்கு, 278 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பொதுமக்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

திண்மக்கழிவு முகாமைத்துவம், மரநடுகை செயற்றிட்டம், வீதி, வாய்க்கால் மற்றும் மதகு புனரமைப்பு, பிரதேசத்தின் குடி தண்ணீர் தேவைப்பாடு, நலிவுற்ற தரப்பினருக்கான பிரதேச சபையின் திட்டங்கள், தனிப்பட்ட காணிகள் சபைக்கு அன்பளிப்பு செய்வதற்கான வாய்ப்பு (தாய் சேய் பராமரிப்பு நிலையம், ஆயுள்வேத வைத்தியசாலை, பொதுப் பூங்கா, கைத்தொழில் நிலையங்கள் அமைப்பதற்கான வாய்ப்புகள்), வீதி விளக்குகளின் தேவைப்பாடுகள், சபையால் மக்களுக்கு ஆற்றப்படும் ஏனைய சேவைகள் (ஆதன பெயர் மாற்றம், கட்டட அனுமதி, முறைப்பாடுகள், இணைய வசதிகள்) போன்ற விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே மக்களுக்கான சேவையை வினைத்திறனான முறையில் ஆற்றும் நோக்கில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்திக்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடலில் பொது மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# பொறுகாமம் பகுதி நீர்நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொறுகாமம் கிராமத்தில் நீர்நிலை ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று களுவாஞ்சிகுடி பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (25) இரவு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அப்பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை அவதானித்ததைத் தொடர்ந்து களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அவ்விடத்துக்கு வருகைதந்த களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்ற நீதிபதி சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் நீதிபதியின் முன்னிலையில் சடலம் நீர் நிலையிலிருந்து மீட்கப்பட்டது.

சடலம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள. சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொறுகாமம் சமூர்த்தி வங்கியில் கடமை புரியும் பெரியகல்லாற்றைச் சேர்ந்த நிலக்சன் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# தையல் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள்

நிறைவாழ்வு மையத்தின் ஏற்பாட்டில் கொடிகாமம் பொது நோக்கு மண்டபத் தில் நடத்தப்பட்ட இலவச தையல் பயிற்சி நெறியின் நிறைவு நிகழ்வும் சான்றிதழ் வழங்கலும் கண்காட்சியும் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றன.

நிறுவனத் தலைவர் கலாநிதி தயா ளினி தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மந்துவில் வடக்கு, மேற்குக் கிராம உத்தியோகத்தர் கானமூர்த்தி, மந்துவில் கிழக்குக் கிராம உத்தியோகத்தர் பிரகாஷ், மந்துவில் மேற்குப் பொருளாதார உத்தியோகத்தர் மோகனரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு: 22 பேர் உயிரிழப்பு; 60 பேர் காயம்



அமெரிக்காவின் மெய்ன் நகரில் லூயிஸ்டன் எனும் பகுதியில் 3 வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அமெரிக்க நேரப்படி நேற்று இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரே நேரத்தில் மெய்ன் நகரின் உணவகம், மதுபான விடுதி உள்ளிட்ட இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தாப் பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் வெளியில் வர வேண்டாம் என்று பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக ஆட்ரோஸ்கோகின் நகர பொலிஸார் சந்தேக நபரின் இரண்டு புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர். சந்தேக நபரின் கையில் துப்பாக்கியுடன் இருப்பது பதிவாகியுள்ளது.

அந்தப் புகைப்படத்தில் இருப்பவர் தொடர்பான தகவல் தெரிந்தால் பகிருங்கள் என பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் துப்பாக்கியுடன் இருந்த நபரின் பெயர் ரொபர்ட் கார்டு என்பது தெரியவந்துள்ளது.

40 வயது மதிக்கத்தக்க அந்த நபரை தேடப்படும் ஆபத்தான நபராக பொலிஸ் அறிவித்துள்ளது. அந்த நபர் இன்னும் பொலிஸாரிடம் சிக்காத காரணத்தால் மெய்ன் நகரம் உச்சபட்ச பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்கள் அனைவரும் மத்திய மெய்ன் மருத்துவ மையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையும் அதனை உறுதி செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் அண்மைக் காலமாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அமெரிக்க துப்பாக்கி வன்முறைகள் தொடர்பான ஆவணக் காப்பகக் குறிப்பின்படி 2023 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையில் மாத்திரம் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 25 ஆயிரத்து 198 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சராசரியாக ஒரு நாளைக்கு 118 பேர் வீதம் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் 170 பேர் குழந்தைகள் 879 பேர் பதின்ம வயதினர் ஆவர். இந்த 25 ஆயிரம் பேரில் 14 ஆயிரம் பேர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டவர்களாவர்.

2023 தொடங்கியதிலிருந்து ஒகஸ்ட் வரை சராசரியாக நாளொன்றுக்கு 66 பேர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

# பாலஸ்தீன மக்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறது ஹமாஸ்!

## - ஜோ பைடன் குற்றச்சாட்டு



பாலஸ்தீன மக்களுக்கு பின்னால் சென்று ஹமாஸ் அமைப்பு ஒளிந்து கொண்டிருக்கிறது. இது கோழைத்தனமானது என்று அமெரிக்க அதிபர் ஜனாதிபதி பைடன் குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கிய ஹமாஸ் தாக்குதலையடுத்து போட்டி போட்டுக் கொண்டு இஸ்ரேல் இராணுவமும், ஹமாஸ் அமைப்பினரும் றி மாறி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனால் பொதுமக்கள் உணவு, தண்ணீர், மருத்துவம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் திண்டாடிவருகின்றனர்.

இந்த நிலையில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்துள்ளன. பாலஸ்தீனத்துக்குச் சீனா, ஈரான், சிரியா, லெபனான் முதலான நாடுகளும், இஸ்ரேலுக்கு இந்தியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகளும் ஆதரவளித்திருக்கின்றன.

இந்த நிலையில், ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ், அமெரிக்க ஜனாதிபதி பைடனை நேரில் சந்தித்து இருதரப்பு உறவுகள், இஸ்ரேல், உக்ரைன் போர் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் பற்றி ஆலோசனை மேற்கொண்டார். இதையடுத்து இருவரும் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய ஜோ பைடன், இஸ்ரேல், தன்னுடைய மக்களின் படுகொலைக்கு பதிலடி கொடுக்க உரிமை உள்ளது. அதே நேரத்தில் அதற்கான கடமையும் உள்ளது. இந்த பயங்கரவாதிகளுக்கு எதிராக, தற்காத்து கொள்வதற்கான இஸ்ரேலின் பாதுகாப்பை நாங்கள் உறுதி செய்வோம்.

காசா முனையிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ, பரந்து விரிந்துள்ள பாலஸ்தீனிய மக்களின் பிரதிநிதியாக ஹமாஸ் அமைப்பு இல்லை என்பது நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஹமாஸ் அமைப்பு, பாலஸ்தீன மக்களுக்கு பின்னால் சென்று ஒளிந்து கொண்டிருக்கிறது. இது கோழைத்தனமானது என்று தெரிவித்துள்ளார்.

# கர்நாடகாவில் வீதி விபத்து: குழந்தை உட்பட 13 பேர் பலி



கர்நாடகா மாநிலம், சிக்கபல்லப்பூர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில்சிக்கி குழந்தை உள்படட13 பேர் உயிரிழந்துள் ளனர்.

இன்று அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகா மாநிலம், சிக்கபல்லப்பூர் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி மீது, கார் ஒன்று மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்துள் ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். அதிகளவு பனிமூட்டம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் இருந்து பெங்களூருக்கு ஒரு குழந்தை மற்றும் 4 பெண்கள் உட்பட 14 பேர் காரில் சென்றுள்ளனர். பெங்களூரை சேர்ந்த இவர்கள் தசரா விடுமுறையில் தங்களது சொந்த ஊருக்கு சென்று திரும்பி கொண்டிருந்துள்ளனர்.

கர்நாடகா மாநிலம் சிக்கபல்லபுரம் மாவட்டத்தில் பகேபள்ளி பகுதியில் கார் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்த தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று சோதனை நடத்தினர்.

இதற்கமைய காரில் பயணித்தவர்கள் அனைவரும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள் ளது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே குழந்தை உட்பட 5 பேர் உயிரிழந்துள் ளனர். மேலும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

விபத்து குறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் வெற்றி பெற்றால் இலங்கையில் சீதைக்கு கோயில் கட்டப்படும்!

## - காங்கிரஸ் தேர்தல் வாக்குறுதி



மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் வெற்றி பெற்றால் இலங்கையில் சீதைக்கு கோயில் கட்டப்படும் என்று காங்கிரஸ் வாக்குறுதி அளித்துள்ளது.

தெலங்கானா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், மிசோரம் ஆகிய 5 மாநில சட்டசபைகளின் தேர்தல்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் நடைபெற உள்ளது.

மத்திய பிரதேசத்தில் அடுத்த மாதம் 17 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்து விட வேண்டும் என்பதில் காங்கிரஸ் பல்வேறு வியூகங்களை வகுத்து வருகிறது.

அதேபோல், ஆளும் பா.ஜ.வும் ஆட்சியை பறிகொடுத்து விடக்கூடாது என்பதில் தீவிரம் காட்டி வருகிறது. இதனால், மத்திய பிரதேசத்தின் தேர்தல் முடிவுகள் இந்தியா முழுவதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் காங்கிரசின் முதல்வர் வேட்பாளர் கமல்நாத் தனது தேர்தல் பிரசாரத்தை தசரா பண்டிகை வாழ்த்துக்களுடன் சமூக வலைத்தளம் வாயிலாக தொடங்கியுள்ளார்.

இதில் அவர் குறிப்பிடுகையில், இந்த புனித பண்டிகையான விஜயதசமியில், மத்தியபிரதேச மக்களுக்கு, காங்கிரஸ் ஆட்சியில் நம்பிக்கை மற்றும் கலாசாரத்தை உயர்த்த எந்த எல்லைக்கும் செல்வோம்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் கிடப்பில் உள்ள இலங்கையில் சீதை கோயில் கட்டும் திட்டம் தொடங்கப்படும்.

மேலும் கோயில் அர்ச்சகர்களின் உதவித்தொகை உயர்வு, கோயில் ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்பு, கோயில் சொத்துகள் பராமரிப்பு ஆகியவை மேற்கொள்ளப்படும். மோ நகரில் அம்பேத்கர் நினைவு சின்னம் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.